## 4 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களால் 5 கோடியே 35 லட்சம் பேர் பயன்பெற்றிருக்கிறார்கள்; கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் போராட்டமே வாழ்க்கை என்றிருந்த

# விவசாயிகளுடைய வாழ்வில் வசந்தத்தை உருவாக்கியவர் முதல்வர்!

## வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பதிலுரை!

**சென்னை, மார்ச் 24-**

**“4 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களால் 5 கோடியே 35 லட்சம் விவசாயிகள் மற்றும் தனிநபர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள்” என்றும், “கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் போராட்டமே வாழ்க்கை என்றிருந்த விவசாயிகளின் வாழ்வில் வசந்தத்தை உருவாக்கியவர் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்” என்றும் வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பதிலளித்து பேசிய அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

வேளாண்மை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசியதாவது:-

நூறாண்டுகள் கண்ட இம்மாமன்றத்தில் படமாகவும், பாடமாகவும் நின்று கொண்டிருக்கும் தமிழினத் தலைவர், எங்களை எல்லாம் ஆளாக்கிய முத்தமிழறிஞர், தலைவர் கலைஞரை வணங்குகிறேன். தலைவர் கலைஞர் நம்முடன் இல்லையே என்கிற ஏக்கத்தினைத் தீர்க்கும் வகையில், இரண்டாம் கலைஞராய் வந்துதித்து, தமிழ்நாட்டை வாழ்வித்துக் கொண்டிருக்கும் திராவிட நாயகன், முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### இந்தியாவிற்கு திசைகாட்டியாய் இருக்கும் திராவிட சூரியன்!

எங்கள் மக்களுக்கு என்றும் கரும்பு, எதிரிகளுக்கு என்றும் இரும்பு, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தான் நம் முதலமைச்சர் அவர்களின் சிறப்பு. (மேசையைத் தட்டும் ஒலி)

**“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கிறையென்று வைக்கப் படும்”**

என்றார், உலகிற்கே தன்னைத் தந்து, வான்புகழ் கண்ட வள்ளுவர். வள்ளுவர் வாக்கிற்கிணங்க, இந்த நான்காண்டுகாலத்தில், சிறப்பாக ஆட்சி செய்து வருபவர், நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இந்தியாவே எப்போதும் தில்லியைப் பார்த்துக்கொண்டிருக்கும் என்பார்கள். ஆனால், அந்த தில்லியே இப்போது தமிழ்நாட்டைதான் பார்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். திருப்பிப் பார்க்கிறது. திராவிட சூரியன் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தாலும், அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டியாய் திகழ்கிறார், நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் தீட்டப்படும் திட்டங்களும், போடப்படும் சட்டங்களும் அனைத்து மாநிலங்களிலும் பின்பற்றப்படுகின்றன. அந்தவகையில், இந்தியாவிற்கே திசைகாட்டியாய் இருக்கும் திராவிட சூரியனை நான் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒற்றை செங்கல்லால் ஒன்றியத்தை ஆட்டம் காண வைத்தவர், நம்முடைய இளைய சூரியன், துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பாவிற்குத் தப்பாது பிறந்த பிள்ளை, தாத்தாவிற்குத் தவறாது வந்துதித்த பேரன், இளைய சமுதாயத்தின் இணையில்லா சூரன், துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

எங்களின் பொதுச் செயலாளர், அரை நூற்றாண்டுகாலமாக இந்த அவையை அலங்கரித்து, முன்னவராக செயல்பட்டு வரும் நீர் வளத் துறை அமைச்சர், துரைமுருகன் உள்ளிட்ட மூத்த அமைச்சர் பெருமக்களுக்கும், என்னுடன் பணியாற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் வணக்கம்.

உயரத்தால் மட்டுமல்ல; குணத்தால், ஆளுமையால் வளர்ந்தோங்கி நின்று தடைகளை உடைத்து அமர்ந்திருக்கும் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கம். எங்கள் கட்சி, எதிர்க்கட்சி என எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி என்ற வேளாண் விவசாயிக்கு மகனாகப் பிறந்த என்னை மூன்று முறை அமைச்சராக்கி அழகு பார்த்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு. தலைவர் கலைஞர், திராவிட நாயகன் முதலமைச்சர் ஆகிய இருவராலும் உருவாக்கப்பட்டவன் நான். வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டு வளர்ந்த என்னை வேளாண்மைத் துறை அமைச்சராக உருவாக்கியது மட்டுமல்ல. வரலாற்றில் முதன்முறையாக வேளாண்மை நிதிநிலை அறிக்கையையும் உருவாக்கி, இம்மாமன்றத்தில் சமர்ப்பிக்கும் பொறுப்பையும் வழங்கி, என்னை வரலாற்றில் இடம்பெற வைத்துவிட்டீர்கள். தமிழ்நாட்டு மண் இருக்கும்வரை இப்பெயர் இருக்கும். இத்தகைய பெருமையை இந்த எளியோனுக்கு உருவாக்கிக் கொடுத்த முதலமைச்சர் அவர்களை மீண்டும் வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன்.

### மாவட்டங்கள் தோறும் கருத்துக் கேட்புக் கூட்டங்கள்!

இதற்கு முன்பாக, நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய சாதனைகளை எடுத்துரைத்திருக்கிறார்கள். அவர் இலக்கிய நடையில், இலக்கியமாக பேசி, இலக்கிய தென்றலாக வீசி, பசுமை தென்றலை உருவாக்கக்கூடிய ஒரு சூழலில் நாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம். நான்கு ஆண்டு சாதனைகளை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், 4 பேரை சமாளிப்பதே பெரிய விஷயம். 234 தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை சமாளிப்பதே பேரவைத் தலைவர் அவர்களுக்கு பெரிய விஷயம். ஆனால், தமிழ்நாட்டில் உள்ள 65 சதவிகித விவசாயிகளை எந்தவித வார்த்தையும் சொல்லாமல், எந்தவிதப் போராட்டமும் இல்லாமல் கடந்த 10 ஆண்டு காலம் ஆட்சி புரிந்த இயக்கத்தில் பல பட்டினி போராட்டங்கள், போராட்டமே வாழ்க்கை என்று விவசாயிகள் இருந்தார்கள். இந்த நான்கு ஆண்டுகாலத்தில், ஐந்தாவது நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கின்ற வகையில், இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக முதலமைச்சர் அவர்கள் விவசாயி களைச் சந்தித்து மாவட்டந்தோறும் சென்று கருத்துக்கேட்பு கூட்டங்கள் நடத்தி அவர்களைச் சந்தித்து, கேட்டு, விவசாயிகளுடைய தேவைகள் என்னென்ன என்பதை அறிந்து அவற்றை நிதிநிலை அறிக்கையில் சேர்க்க வைத்தார்கள். அந்த அடிப்படையில் 4,478 விவசாயிகள் அடங்கிய 28 கருத்துக் கேட்பு கூட்டங்கள் 4 ஆண்டு காலத்தில் நடத்தினோம். அந்தக் கூட்டத்தில் அவர்கள் கூறிய கருத்துகளின் அடிப்படையில், கிட்டத்தட்ட 2,535 கோரிக்கைகள் வைத்தார்கள். அதில் இதுவரையில் 1,166 கோரிக்கைகளை நிறைவேற்றி சாதனை படைத்ததால்தான், எந்தவித கோரிக்கைகளும் இல்லாமல், எந்தவிதப் போராட்டங்களும் இல்லாமல், எந்தவொரு இயற்கை இடர்பாடுகள் இருந்தாலும் கேட்பதற்கு முன்பாகவே நிறைவேற்றி கொடுத்ததன் காரணமாக நேற்றையதினம் இங்கு விவசாயிகள் வந்து வேளாண்மை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துவிட்டுச் சென்றார்கள். இது நிகழும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் விவசாயிகள் போராட்டமே வாழ்க்கை என்று இருந்தார்கள். கரும்பு சாகுபடி என்றாலும், நெல் சாகுபடி என்றாலும் போராட்டம். மழை வந்தாலும் போராட்டம். இப்படி போராட்டம், போராட்டமாக இருந்த விவசாயி களுடைய வாழ்வில் ஒரு வசந்தத்தை உருவாக்கியத் தலைவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பதிய வைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குமுன்பு நிதித் துறை அமைச்சர் அவர்கள் சாதனையைக் கூறினார்கள்.

கடந்த ஆட்சிக் காலத்தில் மகளிருக்கு ரூ.1,000/ மாதாமாதம் கொடுக்கவில்லை. அதைக் கொடுத்திருக்கிறார். இன்னும் சொல்லப்போனால், முதலமைச்சராக இருக்கின்றவர் - நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோதும் மக்களைச் சுற்றி, சுற்றி வந்தார். மக்களுடைய போராட்டத்திலும் களத்தில் நின்றார்கள். அதேபோல, எங்களையும் வேலை செய்ய வைத்தார். எங்களையும் உழைக்க வைத்தார்.

### 1 லட்சத்து 81 ஆயிரம் புதிய பாசன மின் இணைப்புகள்!

ஆக, அந்தளவுக்கு சாதனை புரிந்து, தற்போது முதலமைச்சரான பிறகும், அவர் தொடர்ந்து உழைத்து கொண்டிருக்கிறார், எங்களையும் உழைக்க வைக்கிறார். முதலமைச்சராக பதவியேற்ற பிறகும், அவர் மாவட்டந்தோறும் சென்று, அங்கே ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, எந்தெந்த துறைக்கு எவ்வளவு நிதி என்று ஆய்ந்தறிந்து, அதற்குரிய நடவடிக்கைகள் எடுத்த காரணத்தினால்தான், மக்கள் எதையும் கேட்க வேண்டுமென்ற எண்ணமே இல்லாமல், சிறப்பாக வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். நேற்றைய தினம் தமிழ்நாட்டிலுள்ள, 28 விவசாயிகள் முதலமைச்சர் அவர்களை சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆக, இந்த நான்கு ஆண்டுகளில் கிட்டத்தட்ட 5 கோடியே 35 இலட்சம் விவசாயிகள் மற்றும் தனிநபர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள்.



அதேபோல, நெல் ஊக்கத் தொகைக்கு மட்டும் கிட்டத்தட்ட 1,531 கோடி ரூபாய் இந்த அரசு, முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்ததன் அடிப்படையில், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள், “நெல் விலை என்னாச்சு” என்று. நெல் விலை 2,450 ரூபாய் இன்று - நாங்கள் சொன்னது 2,500 என்றோம். அடுத்தடுத்த நிலைகளில் 2,500 ரூபாய் வழங்கப்படும். தற்போது ரூ.2,450 கொடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோல, பயிர் காப்பீடு திட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு இழப்பீடாக 5,279 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 30 இலட்சம் விவசாயிகள் இந்த நான்காண்டு காலத்தில் பயன்பெற்றிருக்கின்றார்கள்.

மேலும், 23 இலட்சத்து 68 ஆயிரம் இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 26 ஆயிரத்து 724 கோடி ரூபாய் நிதியை முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். விவசாயிகள் கடந்த காலங்களில் மின் இணைப்பு வேண்டும், மின் இணைப்பு வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். நீங்களும்தான் அப்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்தீர்கள், அமைச்சராக இருந்தீர்கள். அந்த கோரிக்கைகள், பத்தாண்டு காலத்திலே நிறைவேற்றப்படவில்லை. ஆனால், இந்த நான்காண்டு காலத்தில் 1 இலட்சத்து 81 ஆயிரம் புதிய பாசன மின் இணைப்புகள் கொடுத்து, விளைநிலம் பரப்பினை அதிகரிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

### ரூ.508 கோடியில் இயந்திரங்கள் - கருவிகள்!

அடுத்து கனமழை. எங்கள் ஆட்சியில் நல்ல மழை பெய்திருக்கிறது. கடந்த ஆண்டு மேட்டூர் அணை திறக்கப்படாமலேயே விவசாயம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஏனென்றால் நல்லவர்கள் ஆளும்போது, நல்ல மழையும் பொழியும். மழையும் வாழ்த்துகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) வறட்சியிலும் திடீர் திடீரென்று மழை பெய்யும். பாதிப்படைந்த விவசாயிகளுக்கு உடனடி நிவாரணமாக வழங்கி, கனமழை, வறட்சி பயிர் பாதிப்பு நிவாரணமாக 1,631 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சருடைய “மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்” என்ற திட்டத்தின்கீழ், மண்ணைக் காப்பாற்றுகின்ற ஒரு திட்டத்தை கடந்த ஆண்டு அறிவித்து, 185 கோடி ரூபாய் கொடுத்து, கிட்டத்தட்ட 4,000 பசுந்தாள் உர விதைகள் வழங்கப்பட்டு, அதன்மூலமாக மண்ணின் மலட்டுதன்மையை நீக்குகின்ற முறை ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். அதேபோல, கிட்டத்தட்ட 55,574 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கு 508 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு அந்தக் கருவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

### ஆயிரம் உழவர் நல சேவை மையங்கள்!

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின்மூலமாக, கிட்டத்தட்ட தமிழகத்தில் இருக்கின்ற 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் 787 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு 50 இலட்சத்து 70 ஆயிரம் விவசாயிகள் பயன்பெற்றிருக்கிறார்கள். ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் புதுப்பித்தல் மற்றும் கட்டமைத்தல் பணிகள் கிட்டத்தட்ட 282 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செய்யப்பட்டிருக்கிறது. புதிய வேளாண் கல்லூரிகளில் 3,000 மாணவர்களை கூடுதலாக சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, மேலும், புதியதாக 4 வேளாண் கல்லூரிகள் அமைக்கப்பட்டதன்மூலம் அதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல, இந்த ஆண்டு, வேளாண் நிதிநிலை அறிக்கையில், முக்கியமாக முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் 1,000 அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வேளாண் கல்லூரியில் படித்த பட்டதாரி மாணவர்கள் பயன்பெறும் வகையில், முதற்கட்டமாக ஆயிரம் உழவர் நல சேவை மையங்கள் துவங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக 10 இலட்சம் ரூபாய் முதல் 20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான இம்மையங்கள் அமைத்திட 30 சதவித மானியமாக 3 இலட்சம் ரூபாய் முதல் 6 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்பட்டு, அவர்களுக்கு குறைந்த விலையில் நிறைந்த சேவை என்ற அடிப்படையில், ஆயிரம் உழவர் நல சேவை மையங்கள் துவங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, குறுவைத் தொகுப்பு. குறுவை தொகுப்பைப் பொறுத்தவரையில், டெல்டா மாவட்டங்களுக்கு மட்டும்தான் குறுவைத் தொகுப்பு அறிவிக்கப்படுகிறது. ஆனால், விவசாயிகள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில், பல மாவட்ட விவசாயிகளும் nondelta பகுதிகளிலும் குறுவைத் தொகுப்பு வழங்க வேண்டுமென்று கேட்டதன் அடிப்படையில், மொத்தம் 160 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 102 கோடி ரூபாய் டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கும், 58 கோடி ரூபாய் காவிரி டெல்டா மாவட்டங்களுக்கும் வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

### மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம்!

இந்த ஆண்டில் புதிய திட்டமாக மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. மலைவாழ் உழவர்கள் பயனடையும் வகையில் சுமார் 23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 20 மாவட்டங்களைச் சேர்ந்த மலைவாழ் மக்கள் பயன்பெறுகின்ற அளவிற்கு மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 3 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலத்தில் கோடை உழவு செய்து, விவசாயிகள் பயனடைகின்ற வகையில் 24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின குறு, சிறு உழவர்களுக்கு கூடுதல் மானியம் வழங்கும் திட்டத்திற்கு, அதாவது தற்போது நடைமுறையிலுள்ள மானியத்தைவிட 20 சதவிகிதம் கூடுதலாகப் பெறும் வகையில், 21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்க, அதாவது, டன் ஒன்றுக்கு 349 ரூபாய் சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவதற்காக 297 கோடி ரூபாய் ஒதுக்கி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் ‘மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்’ திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம். இதற்கு 40 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணெய் வித்துகள் இயக்கம் 108 கோடியே 6 இலட்சம் ரூபாயில் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு வேளாண் காடுகள் கொள்கை வெளியிடப்படும். ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்திற்கு 125 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த 125 கோடி ரூபாயில் 15 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கு ஆறு வகையான காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்புகள் வழங்கப் படும். பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய மூன்று வகையான பழச்செடிகள் அடங்கிய பழச்செடித் தொகுப்புகள் ஒன்பது இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

### ‘கண்டுணர் சுற்றுலா’

மலர் சாகுபடித் திட்டத்திற்கு சுமார் 10 கோடி ரூபாயும், 38 ஆயிரத்து 600 பள்ளி, கல்லூரி மாணவர்கள் உயிர்ம வேளாண் பண்ணைகளுக்குச் செல்ல ‘கண்டுணர் சுற்றுலா’ திட்டமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம் இந்த ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளன.

நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் 31 பேர் தங்களது கருத்துகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்களில் 8 பேர் தவிர, மற்றவர்கள் அனைவரும் வேளாண்மை நிதிநிலை அறிக்கையைப் பாராட்டியும், வாழ்த்தியும் பேசியிருக்கிறார்கள். முதல்வர் அவர்களைப் பாராட்டியும் பேசியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 8 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை வழங்கியிருக்கிறார்கள்.

உறுப்பினர் பொன். ஜெயசீலன் அவர்கள், கூடலூர் பகுதியில் செயல்படுத்தப்பட்டுவரும் வேளாண்மை உழவர் நலத் துறை திட்டங்கள் சரியாகக் கிடைக்கவில்லை என்று தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார். நீலகிரி மாவட்டத்தில், கடந்த 4 ஆண்டுகளில், 37 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி செலவினம் செய்யப்பட்டு, அதன் மூலம் 36 ஆயிரத்து 174 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். அதேபோன்று அம்மாவட்டத்தில், ரூபாய் 53 இலட்சத்தில், 2,900 ஏக்கர் நிலப்பரப்பில் இயற்கை வேளாண்மை ஊக்குவிக்கப்பட்டு, 1,667 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். சுற்றுலாத் துறைமூலம் தேவாலாவில் அமைக்கப்படவிருந்த மணல் பூங்கா பகுதியானது பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும். அதற்கு மாற்றாக, இப்பூங்கா நீலகிரி Race course மைதானத்தில் ஒன்றிய அரசு நிதி 70 கோடி ரூபாயில் சுற்றுலாத் துறை மூலமாக சுற்றுச்சூழல் பூங்கா உருவாக்கப்படவுள்ளது.

மேலும், இஞ்சி, குறு மிளகு, avocado ஆகிய பயிர்கள் குறித்து எதுவும் இடம்பெறவில்லை என்ற கருத்தைக் கூறியிருந்தார்கள். 20252026 ஆம் ஆண்டில், இஞ்சி, குறு மிளகு ஆகிய பயிர்கள் அடங்கிய சுவைதாளிதப் பயிர்களுக்கான சிறப்புத் திட்டம் 11 கோடியே 74 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்று தற்போது அறிவித்திருக்கின்றோம். 69 இலட்சம் நிதியில் வெண்ணெய் பழ (avocado) சாகுபடி ஊக்குவிப்பு திட்டமும் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### பசுமைக் குடில்கள்!

உறுப்பினர் தளி இராமச்சந்திரன் அவர்கள், தளி, ஓசூர் பகுதிகளில் பசுமைக் குடில்களை மேலும் அதிகரிக்க வேண்டுமென்ற கருத்தை வழங்கியிருக்கிறார்கள்.

கடந்த 4 ஆண்டுகளில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பசுமைக் குடில்கள் 6 இலட்சத்து 86 ஆயிரத்து 562 சதுர மீட்டர் ஒதுக்கீடு செய்து ரூ.32 கோடி நிதி செலவினம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 213 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். 2025-2026-ஆம் ஆண்டு ஒரு இலட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் பசுமைக் குடில்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. கொய் மலர்களுக்கான மகத்துவ மையம் தளியில் செயல்பாட்டில் உள்ளது. சர்வதேச கொய் மலர் ஏல மையம் ஓசூரில் செயல்பட்டு வருகிறது. கொய் மலர் ஏற்றுமதி செய்திட ஏதுவாக குளிர்சாதன வசதி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளில் முன்குளிர்விப்பு அறைகள் ரூ. 2 கோடியே 18 இலட்சம் செலவில் 25 அலகுகள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.2 கோடியே 18 இலட்சம் நிதி செலவினம் செய்யப்பட்டு, 25 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். இவ்வாண்டில் தளியில் நறுமண ரோஜாவிற்கான சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் சாகுபடி பரப்பு குறைந்திருக்கிறது என்ற ஒரு கருத்தை வழங்கியிருக்கிறார்கள். 2019-2020-ஆம் ஆண்டில் 146 இலட்சத்து 77 ஆயிரம் ஏக்கர், 2023-2024ல் 151 இலட்சம் ஏக்கராக உயர்ந்திருக்கிறது. உயர்வைப் பொறுத்தவரையில் இந்த ஆட்சியில் 4.23 இலட்சம் ஏக்கர் அளவிற்கு பரப்பு உயர்ந்திருக்கிறது. இருபோக சாகுபடியைப் பொறுத்தவரை, 2019-2020-ஆம் ஆண்டில் 29 இலட்சத்து 74 ஆயிரம் ஏக்கராக இருந்தது, 2023-2024ல் 33 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கராக உயர்ந்திருக்கிறது. சராசரி உணவு தானியப் பரப்பு மற்றும் உற்பத்தியைப் பொறுத்தவரையில் 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் 84 இலட்சம் ஏக்கராக இருந்தது. இவ்வரசு பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில் சராசரி 96 இலட்சம் ஏக்கராக உயர்ந்திருக்கிறது. உயர்வைப் பொறுத்தவரையில் 12 இலட்சம் ஏக்கர் உயர்ந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

### உணவு தானிய உற்பத்தித் திறன்!

உணவு தானிய உற்பத்தியில் அ.தி.மு.க. ஆட்சியில் 4 ஆண்டு காலத்தில் 434.29 இலட்சம் மெட்ரிக் டன், இவ்வரசு பொறுப்பேற்ற 4 ஆண்டுகளில் 456.39 இலட்சம் மெட்ரிக் டன். கூடுதலாக 22.10 இலட்சம் மெட்ரிக் டன் உயர்ந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உணவு தானிய உற்பத்தித் திறன் 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் சராசரியாக எக்டருக்கு 2,876 கிலோவாக இருந்தது, 2021-2022 முதல் 2023-2024 வரையிலான 3 ஆண்டுகளில் சராசரியாக எக்டருக்கு 2,980 கிலோவாக எக்டருக்கு 104 கிலோ உயர்வு அடைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அகில இந்திய அளவில் தமிழ்நாடு, 1வது இடத்தில் கேழ்வரகும், இரண்டாவது இடத்தில் மக்காச்சோளமும், கரும்பும், மூன்றாவது இடத்தில் குறுதானியங்களும், நிலக்கடலையும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன் மற்றும் திருமதி வானதி சீனிவாசன் ஆகியோரும் காட்டுப் பன்றி மற்றும் மயில்களால் பயிர் சேதம் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும்; அதேபோல, மதிப்புக் கூட்டு மையம் வேண்டும் என்ற ஒரு கருத்தை வழங்கியிருக்கின்றார்கள். காட்டுப் பன்றியைப் பொறுத்தவரையில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசாணை எண் 7, நாள் 9.1.2025ல் வெளியிட்டதன் அடிப்படையில், காட்டுப் பன்றியை வனத் துறையின் மூலம் சுட்டுக் கொல்வதற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், காட்டுப் பன்றி ஒன்றிய அரசின் அட்டவணை 2ல் உள்ளதால், உறுப்பினர் அவர்கள் ஒன்றிய அரசிடமிருந்து காட்டுப் பன்றியை நீக்குவதற்கு உரிய நடவடிக்கையைப் பெற்றுத் தந்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண் விளைபொருட்களுக்கு 100 மதிப்புக் கூட்டு அலகுகள் அமைக்க ரூபாய் 1.5 கோடி வரை மானியம் வழங்க இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

### விதைச் சுத்திகரிப்பு நிலையங்கள்!

அடுத்து, ஆத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் A.P. ஜெயசங்கரன் அவர்கள் மக்காச்சோள விதைச் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தென்னை சுருள் பூச்சி தடுப்பு நடவடிக்கை சம்பந்தமாகக் கூறியிருக்கிறார்கள். மக்காச்சோள சாகுபடியை ஊக்குவிப்பதற்காக தேசிய விதைக் கழகம்மூலம் 558 மெட்ரிக் டன் சான்று பெற்ற வீரிய ஒட்டு ரக விதைகள் விநியோகம் செய்யப்பட்டு, எக்டருக்கு 6.5 முதல் 7 டன் மகசூல் கிடைக்கப் பெற்றுள்ளது. மக்காச்சோள வீரிய ஒட்டு ரக விதைகளின் தரத்தை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிர் உரங்கள், அங்கக உரங்களின் தரத்தினை உறுதிசெய்ய 37 மாவட்டங்களில், 687 உர மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் மகுடஞ்சாவடி, டேனிஷ்பேட்டை மற்றும் மேட்டூர் அணை ஆகிய மூன்று இடங்களில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையங்களின்மூலம் மாவட்டங்களுக்குத் தேவையான விதைகள் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. தென்னையைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்திட, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேற்கொள்வதற்கு 12 கோடி ரூபாயும், ஆராய்ச்சிக்கு 4 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம் தொடர்பாக கருத்து கூறினார்கள். வேளாண்மைத் துறையின் பல்வேறு பிரிவுகளான வேளாண்மை தோட்டக் கலை, வேளாண்மை விற்பனை போன்றவற்றிற்கான விதிமுறை களில் மாற்றம் செய்து சீரமைக்கப்பட்டு, விரைவில் ‘உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம் 2.0’ செயல்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆக, இந்த அளவிற்குக் குறைவான சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்துள்ளார்கள். மற்றவர்கள் வாழ்த்திப் பேசியிருக்கின்றார்கள், நன்றியைத் தெரிவித்திருக்கின்றார்கள். இதைத் தொடர்ந்து செயலாற்றிட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பணிகளைத் தீவிரமாகக் கண்காணித்து, எங்களையும் செயல்பட வைத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல கருத்துக்களைக் கூறிய உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசினார்.